40 காலனாக உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பணித் திட்டம் ஏற்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் முதற்கட்டவேலை, இருக்கிற தண்ணீரை அதிகப்படுத்தித் தருவதற்காக என்று, அதற்குரிய அடிப்படையில் செயலாற்றப் படவேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, திருச்சி நகரம் தற்போது விரிவடைந்து வருகிறது. புதிய புதிய பகுதிகளில் ஏராளமான கட்டடங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்கும் தண்ணீர் வசதி செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், இனி மேலாவது செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வளர்ச்சி பெறுகிற நகரங்களினுடைய எதிர்காலத் தேவைகள் கணிக்கப்பட்டு, அந்த அடிப்படையில்தான் இப்படிப்பட்ட புதிய திட்டங்கள் அல்லது வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நகரங்கள் அனைத்தும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வளர்ச்சியை ஒருவாறு கணக்கிட்டுக்கொண்டுதான், 1986-ஆம் ஆண்டில் இவ்வளவு தண்ணீர் தேவை இருக்கும் என்றும், கி.பி. இரண்டாயிரத்தில் இவ்வளவு தண்ணீர் தேவை இருக்கும் என்றும் கணக்கு போடப்பட்டு, அந்த அடிப்படையில் செயல் துவங்கப் படுகிறது.

காட்டுப்புத்தூர் குடிநீர் வழங்கு திட்டம்

*** 4 வினா—திரு. சீ. க. வடிவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், காட்டுப்புத்தூர் பேரூராட்சி குடிநீர் திட்டத்திற்கான சர்வே நடைபெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், மேற்படி திட்டம் எப்போது துவங்கப் படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) காட்டுப்புத்தூர் பேரூராட்சிக்கான குடிநீர் வழங்கு திட்டத்தின் ஆய்வு வேலைகள் முடிந்து ரூ. 10.53 லட்சத்திற்கு திட்ட உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால்

1974 சனவரி 19]

வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. காட்டுப்புத்தூர் பேரூராட்சியின் நிதி வசதி பற்றிய மாவட்ட ஆட்சியாளரின் குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அக்குறிப்புகளின் பேரில் அரசு ஒப்புதலைப் பெற்று இத்திட்டம் துவக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த காட்டுப்புத்தூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்கு வதற்கான ஆய்வு எப்பொழுது மேற்கொள்ளப்பட்டது? இவ்வளவு நாள் கால தாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆய்வு மதிப்பீட்டிற்கு 8—9—1971 ஆம் நாளிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நடவடிக்கை மூலமாக ஒப்புதல் அளிக்கப்பெற்று ஆய்வு வேலைகள் 22—1—1971-இல் தொடங்கப்பெற்று, 26—7—1972-இல் முடிவடைந்துள்ளன. ஆனால், நிதி வசதியைப் பொறுத்துத்தான் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட முடியும். அந்த நிதி வசதி என்பது, பின்னர் மெயின்டெனென்ஸ் செய்வதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு ஆகும் செலவுத் தொகையை அந்தப் பேரூராட்சி மன்றமோ, ஊராட்சி மன்றமோ செலுத்துவதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கிறதா, என்பதைப்பற்றி அறிய மாவட்ட ஆட்சியாளருடைய ஆலோசனை கேட்கப்பட மாவட்ட ஆட்சியாளருடைய ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பொதுவாக, பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் திட்டத்திற்கு ஆய்வு வேலையைத் துவக்கு வதற்காகப் பேரூராட்சியின் நிதியிலிருந்து பெருந்தொகை முன் பணம் கட்டுகிறார்கள். ஆனால், அந்தத் தொகைக்குச் சிறிய வட்டி கூட அரசாங்கம் தருவதில்லை. பிறகு, நிறைவேற்றுவதற்கு இல்லை யென்றால், அந்தத் தொகையும் திருப்பித் தரப்படுவதில்லை. ஆகவே பேரூராட்சிக்குப் பெரும் தொகை இழப்பு ஏற்படுகிறது. இதை மனத்திலே கொண்டாவது, ஆய்வினை விரைவில் முடித்துத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினா; திருமணம் செய்து கொண்ட ஒருவன், 'என் மனைவிக்கு மாமனார்கூட சோறு போடவில்லை' என்று குற்றம் சாட்டுவது போலிருக்கிறது. இந்தத்